போர்வாள்

> இந்தியாவின் சாபக்கேடு அதை இறுக்கிப் பிணித்திருக்கும் பாழான ஆத்மார்த்த தத்துவமே! இந்தியாவின் பிற்போக்குக் கெல்லாம் அதுவே தான் காரணம் என்பது என் கருத்து. ஆத்மார்த்தம் மட்டும் கொஞ்சம் குறைந்திருந்தால், இந்தியாவில், இப்போது உணவு அதிகமாயிருந்திருக்கும் குப்பை குறைந்திருக்கும்;
>
> —ஆல்டஸ் ஹக்ஸிலி

யர்கள்: காஞ்சி. மணிமொழியார் | திராவிடர் | தனி இதழ் அணா 1½
இளஞ்செழியன், B.A. (Hons.) | வார வெளியீடு | வெளிநாடு அணா 2

சென்னை, திருவள்ளுவர் ஆண்டு 1979
மாசி 2
14—2—48 சனிக்கிழமை

வீச்சு 26

ாத வினைகளை எல்லாம் தீர்த்துவைக்கும் புது மருந்து

திருவாசக பக்தர் அன்றொருநாள் கூறியது!

இன்றைபதினம் நாம் வெற்றிபெற ஒரே ஒரு உண்டு. அதுதான் சுயமரியாதை இயக்கம். ரியாதை இயக்கம் என்று நான் வேண்டு றே சொல்லுகின்றேன். ஏனெனில் இது ந்த அகண்ட பரிபூரணானந்தச்சொற்றொடர் ம். இதில் பல்வேறு அரசியல் கட்சிகளும் ந்து நின்று வேலைசெய்ய இடமுண்டு; எளி ஆகும். ஏனெனில் இவை அனைத்தின் ட்ட கொள்கைகளும், பொதுவான நோக் ளும் போட்டுக் காய்ச்சிச் சுண்டவைத்து, ஆண்மை விரிந்த மனப்பான்மை என்ற னைத் திரவியங்களும் வளம்பயக்கும் அரு தும் கலந்து, உட்கொள்ள ஆசையும், உரம் கும் வன்மையும், ஒப்பற்ற சக்தியும் ண்ட தெவிட்டாத திவ்யாமிர்தம்தான் சுய ாதை இயக்கம் என்பதாகும். இன்றைய யல் உலகில் நினைத்ததைக் கொடுக்கும் காம வாகும், அனைத்துணைப் பயன்தரும் சுயமரியாதை எனும் பரந்து விரிந்த இயக்கம். உரிமைப் பஞ்சமும், உணர்ச்சி வறட்சியும், ஒடுங்கிய உடலும், நடுங்கிய கால்களும்கொண்டு ஒதுக்கப்பட்டுள்ள சிறுபான்மைக் கூட்டத்தின் வயோதிகத்தையும் நொடிப்பொழுதில் விரட்டியடிக்கும் "வோரனூப்" ஆப்பரேஷன் சிகிச்சை பெற்றதாகும் இளமை கொழிக்கும் நம் இனிய சுயமரியாதை இயக்கம்.

"மனிதன் மனிதனாக வாழவேண்டுமென்பதும், மனிதன் பிறப்பில் வேறுபாடுகள் கனவிலும் காண்டல் தவறு என்பதும், உண்ண உணவும்—உடுக்க உடையும்—உறங்க இல்லமும்—உயிர்வாழ உரிமையும்—ஓங்கிநிற்க வசதிகளும் உலகில் வழங்கப்படவேண்டும் என்பதும் சுருங்கச்சொல்லின் சுயமரியாதை இயக்கத்தின் திரண்டுருண்ட கொள்கைக் குளிகைகள் ஆகும். இந்த எஸ்ஸன்ஸ் (Essence Pills) மாத்திரை

(11-ம் பக்கம் பார்க்க)

தமிழ் ஒளியை மதங்களிலே சாய்க்காமை வேண்டும்

நினைவு மேடை

புரோகித வியாக்யானம்!

1926. சென்னை வண்ணாரப்பேட்டையின் ஒரு பகுதியில் தேர்தல் கூட்டம். ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்—வெள்ளுடை தரித்த ஞானி தியாகராயர் பேசி முடித்தார். முடிந்ததும் ஒரு காங்கிரஸ் தொண்டர் நீங்கள் சுய ஆட்சியை ஏன் வெறுக்கிறீர்கள் என்று தியாகரை நோக்கிக் கேட்டார். தியாகராயர் "யாரு யாரு, யாரு வெறுக்கிறேன்" என்று கேட்டுக்கொண்டே தொண்டரை நோக்கி முன் வந்தார். தொண்டர் பின்னுக்குப் போனார். காங்கிரஸ் தொண்டரின் அச்சத்தைக் கண்டு நெஞ்சு கொதித்தார் தியாகர். "தம்பி, ஏன், பின்னிடுகிறாய்? ஏன் முன்னுக்கு வரலாகாது? ஏன் என்னைத் தாக்கலாகாது? இரத்தத்திலே அச்சமிருக்கிறது. வாய்பட்டும் சுய ஆட்சி சுய ஆட்சி என்று முணு முணுக்கிறது. அச்சத்தை உதறு. வா முன்னே. சுயஆட்சி தானே வரும்" என்று வீரமுழக்கம் புரிந்தார். தொண்டர் நடுநடுங்கிப் போய்விட்டார். பக்கத்தில் இருந்த அறிஞர் திரு. வி. க—தீவிர காங்கிரஸ் தலைவர் அந் நாளில்—"தொண்டர் பின்னுக்குப் போனது அச்சத்தின்பாற் பட்டதன்று; தங்கள் முதுமைக்கு மரியாதை" என்று கூறினார். உடனே கல கலவென நகைத்துவிட்டுக் கூறினார் தியாகராயர் இது புரோகித வியாக்யானம் என்று! அவ்வளவுதான்! கூட்டம் 'கொல்' என்று சிரித்து விட்டது.

நாய்க்கர், நாய்க்கர்தான்!

1925-ல் காஞ்சீபுரம் காங்கிரஸ் மாநாட்டில், பெரியார், காங்கிரசைவிட்டு வெளியேறினார். முதலியாரும் நாயுடுவும் உள்ளேயே இருந்துவிட்டனர். (முதலியார் என்றால் திரு. வி. க. நாயுடு என்றால் டாக்டர் வரதராஜலு. இவையெல்லாம் அந்தக் காலத்துக் குழூஉக் குறிகள்) நாயக்கர், நாயுடு, முதலியார் மூவர்க்கும் இடையே பெரும் போராட்டம், அடுத்த ஆண்டு! குறிப்பாக, பெரியாரின் பிரசார பீரங்கி தன் நண்பர்கள் இருவர் மீதும் சரசர என குண்டு மாரி பொழிந்த காலம் அது. பெரியாருக்கு வந்த முறை சில நாட்களில் திரு. வி. க., டாக்டர் நாயுடு இருவருக்கும் வந்தது. அவர்களும் காங்கிரஸ் நடவடிக்கைகளிலிருந்து விலகி அரசியலைவிட இப்போது சமூகக் கொடுமைகளைக் களைவதே முதல் வேலை என்று முழக்கமிடலாயினர். தம் வழிக்கே அவர்களும் வந்துவிட்டதைக் கண்டார் பெரியார்; எடுத்தார் பேனாவை; தீட்டினார் சில சொற்கள்:

"நாம் பச்சைத் தமிழில் எழுதுகிறோம், பேசுகிறோம். டாக்டர் நாயுடு அவர்கள் ராஜதந்திரத் தமிழில் எழுதுகிறார், பேசுகிறார். திரு வி. க. முதலியார் அவர்கள் ... கத் தமிழில் எழுதுகிறார், பேசுகிறார். ... நாள் வித்... சமே தவிர வேறில்லை. பல காரணங்களால் பல... பச்சைத் தமிழ் வராது. இதற்காக ... ஒருவர் கலக்கமுற வேண்டியதில்லை. பகைவர் சூழ்ச்சிகள் பல... கப் பெருகிவிட்ட இக்காலத்தில் தமிழ் மக்கள் பாஷை... தியாசத்தைப் பார்த்துக் கொண்டிருப்பது பைத்தியக்காரத்தனமே ஆகும்."

பாாத்தது தமிழ்நாடு. ஐ... கூவிற்று. பெரியாரின் பேனா ... எவ்வ... அழகாகத் தாக்கத் தெரியுமோ அதுபோல் தாங்கவும் தெரியும் என்பதைக் கண்ட தமிழ்... என்ன இருந்தாலும் நாயக்கர் நாயக்கர்தான் என்று குதித்துக் கூத்தாடிற்று அன்று. ... போதோ—? தமிழ்நாடே பெரியார்—பெரியார் தமிழ்நாடு என்று ஆகிவிட்டது. அவருடைய வாதத் திறமை பகைவரும் கண்டு அஞ்சும் ஒன்று என்பதை யார் மறுக்க முடியும்?

இதோ, தம்பி, ...!

சார்லஸ் பிராட்லா முப்பதா... ளுக்கு மு... இங்கிலாந்தைக் குலுக்கிய ஒரு ... தறிவு வா... இங்கே பெரியாரைக் கேட்பது ... லத்தான் ... கேயும் மக்கள் அடிக்கடி அ... ப் பார்க்கும் போது, "கடவுள் உண்டா இல்லையா" என்று கேட்பது வழக்கம். பார்த்தார் பிராட்லா. இ... மக்களுக்குச் சரியான பாடம் ... க்கவேண்... என்று ஒரு யுக்தி செய்தார். ... ாதுக்கூட்... ஒன்றில் மேடைமீது ஏறி நின்றுகொண்ட... "தோழர்களே, கேளுங்கள். ஐந்து நிமிடங்... இந்த மேடைமீது நிற்பேன். இந்த ஐந்து நிமி... களுக்குள், கடவுள் இருப்பது உண்மையானால் என்னை அவர் சங்காரம் செய்து ...ட்டும். ஐ... நிமிடங்களுக்குள் எனக்கு அ... நேரவி... என்றால் "அவர்" இல்லை என்று அர்த்த... என்று மடமடவென்று வார்த்தைகளை வீசிவி...

(11-ம் பக்கம் பார்க்க)

உண்டா இல்லையா? இது, மக்கள், ரியாதைக்காரர்களைக் கண்டதும் ளும் பல கேள்விகளில் ஒன்று. கு ஒரு விடை, இந்தச் சிறுகதை.

அத்தை வீட்டில் பேய்!

"முடியரசன்"

போகளத்தான்! எப்பப் த்தாலும் உங்களுக்குக் கேலி ! இனிமேல் என்ன கேட் லும் நான் கொண்டு வந்து ாட்டேன் போங்கள்!" று அன்பும் நாணமும் கலந்த ஞ்சங் குரலில் கூறி டு ஓடிவிட்டாள் ஊர்மிளா.

* * *

ர்மிளா என் அத்தை மகள். நக் கொண்டிருக்கிறாள். சைக் கிளி என்றால் பச்சைக் யேதான். மங்கைப் பருவம் ு தன்வருகையைத்தெரிவித கொண்டிருந்தது. அவ்வளவு குடைய அவளுக்குக் கூந் மட்டும் கொஞ்சம் நீளத்தில் றவாகவேயிருந்தது. அந்த குறையைத்தவிர அழகிலும் த்திலும் வேறு குறை காண யாது. அந்தக் குறை கூட க் காலத்தில் 'பாஷன்' ரு லும் பெண்களுக்குத் இலக்கியத்தில் படித்தபடி ல் அடர்ந்து நீண்டு இருக்க ண்டும் என்பது என் ஆசை. குழல் — தோகைக்குழல் றெல்லாம் வருணிக்கப்பட்டி தைப் படித்த எனக்கு அது றயாகத் தோன்றினதில் யில்லை. இருந்தாலும் மற் நிறைவுகள் அந்தக் குறை மறைத்து விட்டன.

ர்மிளாவின் தாய் என் பனுடன் பிறந்த அத்தை, க்கைப்பட்ட இடம் பெரிய ம். பல வேலி நிலங்கள் உண்டு. வீடு வாசல், சொத்து சுகம் எல்லாம் நிறைந்த இடம். அவ்வளவு பெரிய இடத்தில் வாழ்க்கைப்பட் டிருந்தாலும் தன் மகளை எனக்கே கொடுக்க வேண்டும் என்பது என் அத்தையின் ஆசை.

எனக்கும் அங்கேயே மணம் செய்து கொள்ள விருப்பந்தான். பணத்துக்கு ஆசைப் பட்டல்ல. ஊர்மிளாவின் உள்ளமும் உட லும் என்னை அந்த உறுதிக்குக் கொண்டு வந்தன

வழக்கம் போல இந்தத்தட வையும் முதற்பருவ விடு முறைக்கு அத்தை வீட்டிற்கு வந்திருந்தேன்.

* * *

"ஊர்மிளா! கொஞ்சம் குடிக் கத் தண்ணீர் கொண்டுவா!" என்றேன்.

"நான்தான் இனிமேல் கொண்டுவர முடியாது என்று சொல்லி விட்டேனே, நான் கொண்டுவரவே மாட்டேன்" என்றாள் அவள்.

"சீ! கழுதை! கேட்டால் கொடுத்தால் என்னவாம். மாட்டேன் என்று சொல்வது. இதுவா மரியாதை" என்று எனக்காகப் பரிந்து பேசினாள் என் அத்தை.

"இல்லம்மா! அத்தான் சும்மா சும்மா கேலி பண்ணு தம்மா"

"கேலிசெய்தால் என்ன! அத்தான் தானே, போம்மா போ! தண்ணீர் கொண்டு போய்க்கொடு."

தண்ணீர் எடுத்துத்தந்தாள்.

வாங்கிக் கொண்டே "கல்யா ணம்செய்த பிறகு இப்படியெல் லாம் மாட்டேன் என்றுசொல்ல முடியுமோ?" என்றேன்.

"பாரும்மா" என்று சொல்லி விட்டு ஓடிவிட்டாள்.

"அத்தை! என் வீட்டிற்கு வந்த பிறகு ஊர்மிளா என்ற பேரை மாற்றி நல்ல தமிழ்ப் பெயராக வைத்துக் கொள்ளப் போகிறேன்"

"அத்தான்! தமிழ்ப் பண்டி தர் குணத்தைக் காட்டி விட்டீர் களே!" என்று குறும்பாகச் சிரித்துக் கொண்டே உள்நுழைந் தான், முருகன்—ஊர்மிளாவின் உடன் பிறந்தான்.

"ஆமாப்பா! உங்கள் சொந்த மொழியில் பேர் இருக்க வேண் டும் என்று சொன்னால் அது இழிவாகத்தான் தோன்றும்"

"விளையாட்டுக்குச் சொன் னேன் அத்தான். எழுந்திருங்க சாப்பிடலாம்."

இரவு மாடியில் படுத்திருந் தேன். மணி பன்னிரண்டை நெ ருங்கிக் கொண்டிருந்தது. எனக்கு உறக்கமே வரவில்லை. பலவகை எண்ணங்களில் மூழ்கி யிருந்தேன்.

மாடிப் படியில் யாரோ ஏறி வரும் சத்தம் கேட்டது. உற் றுக் கேட்டேன். ஏறிவரும் சத்தம் நின்றது. ஆனால் ஒரு

வரையுமே காணோம். சிறிது நேரத்தில் எனக்குப் பக்கத்தில் ஒருவித சத்தம் கேட்டது. மிக மிகக் கூர்ந்து கேட்டேன். 'உஸ்ஸ்....உஸ்ஸ்' என்ற சத்தம்.

மனம் படபட என்று அடித்துக் கொண்டது. மூச்சு வெகு வேகமாயிற்று. சத்தம் வந்த பக்கம் மெதுவாகத் தலையைத் திருப்பினேன். ஏதோ வெள்ளையாக ஒரு உருவம் தெரிந்தது. படபடப்பு இன்னும் அதிகமாயிற்று; 'பேயோ' என்று எண்ணினேன். 'குப்' என்று வியர்த்து விட்டது. வெள்ளை உருவம் வரவரப் பெரிதாகத் தெரிந்தது. அது என்னை நெருங்கி வந்து கொண்டிருந்தது. நெஞ்சம் வெடித்து விடும்போலிருந்தது. கூச்சல் போட எண்ணினேன். ஆனால் கேலி செய்வார்களே என்று எண்ணிக் கொண்டே எழுந்தேன். தலையணை தொப்பென்று கீழே விழுந்தது. விழுந்தவுடன் 'குடு குடு' என்று ஓடும் சத்தம் கேட்டது. மறுபடியும் மாடிப் படியில் சத்தம். சே! இனிமேல் இங்கிருப்பது ஆபத்து என்று எண்ணிக் கீழே இறங்கி வந்து திண்ணையில் படுத்து விட்டேன்.

விடிந்தவுடன், "அத்தை, மாடியில் பேய் நடமாட்டம் இருக்கும் போலேயிருக்கு, என்றேன்.

"அத்தான்! அது தான் பயந்து போய்த் திண்ணையில் படுத்து விட்டீரோ?" என்றான் முருகன்.......

"எல்லாம் உனக்கு விளையாட்டுத்தானப்பா, நேரில் பார்த்தேன்—அப்புறமென்ன!"

"எதைப் பார்த்தீர்கள்? பேயையா?"

"ஆமாம், பேயைத்தான். பன்னிரண்டு மணி இருக்கும். படியில் யாரோ ஏறிவருஞ் சத்தம் ' ட்டது. சிறிது நேரத்தில் பக்கத்தில் 'உஸ்ஸ்—உஸ்' என்று சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். வெள்ளையாக ஒரு உருவம் தெரிந்தது. வரவரப் பெரிதாயிற்று. அதை என் கண்ணாரப் பார்த்தேன். அதன் பிறகு தான் இங்கு வந்து படுத்தேன்"

"அத்தான்! பேயுமில்லை, பிசாசுமில்லை! வேறு எதையோ பார்த்து இருட்டிலே பயந்து விட்டீர்கள்!"

"முருகா! உனக்கு எப்போதும் விளையாட்டுத்தான். நான் நன்றாகப் பார்த்து விட்டுச் சொல்லுகிறேன்— என்னமோ......சொல்லுகிறாயே!"

"சரி, அத்தான், உடனே 'லைட்' டைப் போட்டுப் பார்த்தீர்களா?"

"லைட்......போடவில்லை...... அதை எதற்கு நாம் அவ்வளவு கவனிக்க வேண்டும் என்று வந்து விட்டேன்."

"அத்தான்! அப்படியானால் அது நிச்சயமாகப் பேயில்லை. வேறு எதையோ பார்த்திருக்கிறீர்கள் அது உங்கள் கண்ணுக்கு இருட்டானதால் பேய் போலத் தோன்றியிருக்கிறது.

"இதோ இதைப் படித்துப் பாருங்கள்!'

"அது என்ன?!' என்று வாங்கிப் படித்தேன்.

"திருஷ்டாந்தரமாக பேய் பிடித்த வீட்டின் சம்பவமொன்றை எடுத்துக் கொள்வோம். பாதி இரவில் ஒரு சப்தம் கேட்டதாக இருக்கட்டும். இந்தச் சப்தம் யாரால் வந்தது? சாதாரணமாகக் காற்றால் சப்தம் உண்டாயிருக்கலாம். அல்லது மனிதர்களால் உண்டாயிருக்கலாம். அல்லது ஏதாவது சாமான் விழுந்ததால் உண்டாயிருக்கலாம். அல்லது சப்தம் கேட்பதுபோல் எண்ணியுமிருக்கலாம். அல்லது காதின் ... வீனத்தால் சப்தத்தைக் ... மாதிரியிருக்கலாம். இ... காரணங்களால் சத்தம் ... சம்பவம் உண்டாவது ... ஜம்......சத்த ... உண் ... காரணம் ... தெரியாதபடி ... பழக்க வ...ளையால ... சத்தம் தெய்வத்தாலோ, ... லோ, பிசாசாலோ உண் ... றென்று ... ிரமானிக்கின்...

"இது என்ன பத்திரி... சரி சரி! திராவிட நாட... எப்போ இதிலே சேர்... இந்தக் கூட்டத்திலே சேர்... எங்கே பேய் பிசாசை ... போகிறாய்?"

"அத்தான்! சூரியனைப் ... விழுங்குகிறது என்று ... மாக நம்பிக்கொண்டிருந்தா... தைச் சொன்னீர்கள், ... நான் சொல்வதை நம்பப்... றீர்கள்!"

"சரி தம்பி நேரமா... காப்பி சாப்பிட எழு... அவன் அப்படித்தான் ... பாகப் பேசுவான். ... இல்லை என்று சொல்கிற... டத்திலே சேர்ந்த நா... சேர்ந்திருக்கிறான்! ... சொல்லி என் அத்தை ... வாதத்திற்கு முற்று... வைத்தாள்.

அன்று இரவு வண்... புறப்பட்டு ஊர்வந்து... தேன்.

* * *

மூன்று மணிநேரம் என்... கொண்டேயிருந்தேன். ... டாம் பருவ நிறைவு... தது. அத்தை வீட்டிற்கு... சேர்ந்தேன்.

ஊர்மிளாவைக் காண... லோடு வந்தேன். அ... காண முடியவில்லை. பாவ... தாவணியைத் தாங்கி ... லல்லவா அவளைப் பார்க்... யும். அவள் பருவத்தில்...

ந் தாங்கியிருந்தது. சமயற்
டில் அங்குமிங்கும் செல்லும்
ழுது அரை குறையாகப்
த்துக் கொண்டேன். அவ்
வுதான். அவளும் சாள
தின் வழியே சந்திரனைக் காட்
ள். நான் பார்த்துவிட்டால்
டென்று சந்திரன் மறைந்து
ம்.

அன்று மாலை அத்தை கோவி
ந்துச் சென்றுவிட்டார்கள்.
யாவும் முருகனும் கூட
லை. நல்ல வாய்ப்புக் கிடைத்
என்று சமையற்கட்டில்
ழைந்தேன்.

'ஐயையோ!'' என்று சொல்
கொண்டே ஓடி மறைந்தாள்
வின் பின்புறம்.

கதவை இழுத்தேன்.

ந் தாமரையால் முகத்தா
ரையை மூடிக்கொண்டாள்.
மரையை வலிய மலரச் செய்
என் கைகள்.

'அம்மா வந்துவிடுவார்கள்!
ங்கள்!'' என்று அவள்
ம்போது அந்தக் குரலில்
பம், நாணம், அச்சம்,
புஎல்லாம் நுழைந்திருந்தன.

'ஊர்மிளா!'' என்று
ர்ந்த குரலில் அழைத்தேன்.
குரலில் கரகரப்பும் கலந்
ந்தது.

'அத்தான்!'' என்றாள்.
த் தளத்திலிருந்து பெரு
சுடன் வெளிவந்தது அந்த
. அவள் நிமிர்ந்து என்னைப்
க்கும்பொழுது அந்தக் கண்
என்ன என்னவோ பேசின.
நிறைந்த பார்வை.

இருவரிடையேயும் அமைதி.

'என்னை மணப்பதில் தடை
லையே! விருப்பந்தானே!''
றேன்.

'இல்லை என்று ஒருவரிட
சொல்லவில்லையே''

தடை இல்லை! அன்று?''

'இல்லை இல்லைல விருப்ப
என்று சொல்; வில்லையே
என்றேன்..........சரி......போங்கள்...அம்மா........''

"போகிறேன், இரவு மாடிக்கு வருகிறாயா?'' என்றேன். அவளுடைய முறுவல் பூத்த முகத்தை நாணம் வந்து வளைத்துவிட்டது.

"ஊர்மிளா!'! என்று முகத்தை நிமிர்த்தினேன்.

"வருகிறாயா?''

உடன்பாட்டைத் தலையசைப்பின் மூலம் தெரிவித்தாள்.

அளவு கடந்த மகிழ்ச்சி எனக்கு. அத்தையும் வந்துவிட்டார்கள். ஆனால் பாழும் அந்த இரவுதான் விரைந்து வரக் காணோம். அப்பொழுது தான் இலக்கியத்திற் கண்ட 'விரகதாபம்' இன்னதென்று உணர்ந்தேன்.

எப்படியோ இரவும் வந்துவிட்டது. நள்ளிரவும் வந்துகொண்டிருந்தது. ஆனால் அவள் தான் வரவில்லை. வந்துவிடுவாள், வந்து விடுவாள், என்று என் இதயத் துடிப்பு ஒவ்வொன்றும் சொல்லிக்கொண்டேயிருந்தன. அவள் வந்தால் எப்படிப் பேசவேண்டும், அகநானூறு முதலியவற்றில் கண்ட இலக்கிய இன்பம் எவ்வாறுளது என்று காண வேண்டும் என்றெல்லாம், கோட்டை கட்டிக்கொண்டிருந்தேன்.

மாடிப்படியில் சத்தம் கேட்டது. ஆம் அவள்தான் வருகிறாள்—மெதுவாகக் காலடியை எடுத்துவைத்து வருகிறாள்—சத்தம் மேல் படிக்கு வந்துவிட்டது. சத்தமும் நின்றுவிட்டது. சரி வந்துவிட்டாள். நாம் உறங்குவதுபோல் பாசாங்கு செய்யலாம். நம்மை எப்படி எழுப்புகிறாள் பார்ப்போம் என்று எண்ணிக் கண்ணை மூடிக்கொண்டேன். சத்தம் அருகில் கேட்டது. என் துடிப்பு மிக வேகமாயிருந்தது. ஆனால் அவள் என்னை எழுப்பவில்லை. என்னால் அதற்குமேல் பொறுத் திருக்க முடியவில்லை. நாமே.......என்று கண்விழித்தேன்.

"உஸ்ஸ்—உஸ்ஸ்'' சத்தம் கேட்டது. அணைப்புக்காகத் துடித்த துடிப்பு அச்சத் துடிப்பாக மாறியது. திரும்பினேன். அந்தப் பழைய வெள்ளை உருவம் தெரிந்தது. அசைந்து அசைந்து ஆடியது. இடையிடையே 'உஸ்ஸ்' சத்தம். திடீரென்று வெள்ளை உருவம் கீழே உட்கார்ந்தது. மனம் பதறியது. உடல் நடுங்கியது. எழுந்து 'லைட்' போட நடந்தேன். மூன்றெட்டுக்கள்தான் காலை வைத்திருப்பேன். என் மேல் ஒரு உடம்பு மோதியது. 'ஐயோ' என்று அலறிக் கீழே சாய்ந்துவிட்டேன். உடனே பட்டப்பகல் போல வெளிச்சம் தெரிந்தது. 'எலக்ட்ரிக்ஸ்விட்ச்'சிலிருந்து கையை எடுத்துக் கொண்டிருந்தாள் ஊர்மிளா.

"ஏன் இப்படிச் சத்தம் போட்டீர்கள்?'' என்று மெதுவான குரலில் கேட்டாள்.

"ஒன்றுமில்லை'' என்று சொல்லிவிட்டு வெள்ளை உருவம் உட்கார்ந்த பக்கம் பார்த்தேன். ஒன்றையும் காணவில்லை. ஆனால் அந்த இடத்தில் வேட்டி கிடந்தது. அப்பொழுதான் உண்மைப் 'பேயை'க் கண்டுபிடித்தேன். அந்த மூலையில் கொடியில் காய்ந்துகொண்டிருந்த வேட்டி காற்றில் அசைந்தது, பயந்த என் கண்ணுக்கு உருவமாகப் புலப்பட்டிருக்கிறது. அது கீழே விழுந்தது உட்கார்ந்தது போலத் தெரிந்திருக்கிறது. ஆனாலும் அந்த 'உஸ்ஸ்' எப்படி வந்தது? [illegible] சத்தம் கேட்டதே! அது எப்படி வந்தது?

[அடுத்து முடியும்]



14—2—48 சனிக்கிழமை

பொழுது புலர்ந்தது

பொழுது புலர்ந்தது; புத்தொளி எழுந்தது; புன்மை இருட்கணம் போயின யாவும். எழுபசும் பொற்சுடர் எங்கணும் பரவி இன்பப் புதுநடம் புரிந்தது யாண்டும். எங்கும் மகிழ்ச்சி; எங்கும் களிப்பு; எங்கும் புன்னகை பூத்த முகத்துடனே உலவும் விடுதலை வீரர்கள். ஒருவரை ஒருவர் காணும்போது, அடிமை வாழ்வு அகன்றதே என்றெண்ணும்போது, புத்தம் புதிய நல்வாழ்வு பிறந்ததே என்று நினைத்து மகிழும்போது, அவர்களை அறியாமலே அவர்கள் வாய் விடுதலைக் கீதம் இசைக்கிறது; அவர்கள் உள்ளத்தைக் கிழித்துக் கொண்டு ஓடோடி வருகிறது "வாழ்க இலங்கை! வாழ்க விடுதலை!" என்னும் கற்கண்டு மொழி. அது காற்றுடன் காற்றாய்க் கலந்து, கலந்து, அழகிய இலங்கையை, வீர இலங்கையாய்—விடுதலை இலங்கையாய்—மகிழ்ச்சிக் கடலில் நீந்தித் திளைக்கும் புதிய இலங்கையாய்—உரிமை உரிமை உரிமை என்று எக்காளமிட்டுக் கூவும் எழில்பெறு இலங்கையாய் மாற்றி அமைத்து மறுகோலம் செய்கிறது. இன்றைய ஈழநாட்டுக் காட்சிகள் இவை.

விடுதலை பெற்றுவிட்டது இலங்கை. கிட்டத்தட்ட மூன்று நூற்றாண்டுகள், பிறர் ஆதிக்கம் எனும் சுழல்காற்றில் சிக்குண்டு சிதைந்துபோன இலங்கை, இதோ, பிப்ரவரி 4-ல் இழந்த உரிமையை மீண்டும் பெற்றது; குனிந்த தலையை நிமிர்த்தி நின்றது; மூடிய கண்களைத் திறந்து பார்த்தது. புதிய சகாப்தம் பிறக்கக் கண்டது—மகிழ்ந்தது; நம்மையும் மகிழச் செய்தது.

1580-ல் இலங்கையின் உரிமை பறிபோயிற்று. 1948-ல் இழந்த உரிமையை மீண்டும் பெற்றது இலங்கை. இடையே உள்ள நெடுங்கால இடைவெளியில், இலங்கை, மதிமுகம் காணா வானம்போல, மழைமுகம் காணாப் பசும்பயிர் போல, இசை காண் அறுந்த மகர யாழ்போல, கண்ணொளி இழந்த கவிஞன் போல இருண்டு கிடந்தது. பழமுதிர் சோலையே ஆனாலும் அது பாலைவனத்திலே இருக்குமாயின் அதன் பண்பும் பயனும் வளமும் தெளிவும் எவர்க்குப் பயன்படும்? அதுபோன்ற நிலையில்தான் இருந்தது இலங்கைத் தீவும், வேற்றுநாட்டவர் ஆட்சியில்! அந்த ஆட்சிக்கு முடிவு கட்டப்பட்டுவிட்டது இத் திங்கள். எனவேதான் இலங்கை மகிழ்ந்தது. நாமும் மகிழ்கிறோம். உரிமை வாழ்வின் உயர்வினை உணர்ந்த எவருமே மகிழ்கின்றனர்.

கொழும்பு ராணிப் பூந்தோட்டத்தில் சிலையொன்று உண்டு. அங்கே செல்லும்போதெல்லாம்—அந்தக் கற்சிலையைக் காணும்போதெல்லாம்—அந்தச் சிலையிற் பொறிக்கப்பட்டிருக்கும் சின்னத்தை எண்ணும்போதெல்லாம் இலங்கை மக்கள் உள்ளம் குமுறும்; நரம்பு புடைக்கும்; குருதி கொதிக்கும்; தோள்கள் துடிக்கும்; கண்களில்
தீப்பொறி பறக்கும்; கைகள்
வெடுக்கும். அதை நினைக்க நி
அவர்கள் ஒவ்வொருவரும் ஒரு
மாடும் எரிமலை ஆவர். அந்த
மலை திடீர் திடீரென்று
வெடித்து பெரு மலைகளையும்
களையும் ஊர்களையும் சோலை
யும் அள்ளி விழுங்கிவிடும். பெ
தத்தில் ஈழநாட்டவர் — அவ
ருள்ளே பெருப் பகுதி சிங்கள
ஒரு பகுதி தமிழர்; மற்றொரு ப
மலாய் மக்கள் மகமதியர் இ
பிறர்—அனைவர் வாழ்க்கையிலு
அமைதி என்னும் மெல்லிய
ஊடுருவிப் பாய்வது வழக்
என்ற போதிலும் அந்த ரா
பூந்தோட்டத்துச் சிலையைப் ப
தால் அவர்களிடமிருந்து அ
பறந்துவிடும்; ஆத்திரம் அதனி
தில் வந்து புகும். கொதிப்
கோபமும் கிளர்ந்து கிளர்
எழும். ஆவேசமும் அதன் அ
பிறந்த ஆரவாரமும் புரட்சிப்
லினை எழுப்பிவிடுகிறது. காரண
அந்தச் சிலை ஓர் அவமானச் சி
னம்; இனிய இலங்கையின்
ஐரோப்பிய அடிமை முத்தி
பொறிக்கப்பட்டுவிட்டது எ
தைக் கண்டதும் விளக்கும்
அழியாத பழியின் உருவம்; க
டியில் நின்றாண்ட முடிமன்
பரம்பரையைச் சீரழித்த பிற
டுப் பொல்லாங்கை — ஏகாதிப
யப் பேராசைப் பெருங் கொள்
ளையைக் கண்ணெதிரே காட்
அடையாளச் சித்திரம். அ
அந்தச் சின்னம்தான் இலங்கை
இறங்கிய முதல் போர்த்துகேசி
செதுக்கிய சித்திரம்.

1505-ல், முதன் முதலாக, டா
லொரென்சோ டி அல்மேடா எ
னும் போர்ச்சுகீசியன் ஒருவ
இலங்கைக்கு வந்துசேர்ந்தா
போர்ச்சுகல் பிரதிநிதியாக. அ
வளவுதான். பின்னே போர்சு
ஏகாதிபத்தியம் வந்துசேர்ந்த
அடிமைச் சிறு வாழ்வு வந்துசே
தது. உரிமைக்கும் விடுதலைக்கு
பெரியதோர் முற்றுப் புள்ளியு
வந்துசேர்ந்தது. கொலை, கொள்
வஞ்சம், சூழ்ச்சி, பிரித்தாளும் த
திரம் எல்லாமும் வந்துசேர்ந்தன

எட்டாவது பராக்கிரமபாகு அ
தக்காலத்திய இலங்கை வேந்த
லொரென்சோ—டி—அல் மேட
விரித்த வலையில் விழ்ந்தான்

...ஓ, நீ யானைகளைக் கொடு.
...ந்த தந்தங்களைக் கொடு. லவங்
பட்டைகளைக் கொடு. வாச
...த் திரவியங்களைக் கொடு. பதி
...கு உன் பகைவரிடமிருந்து
...ன் உனக்குப் பாதுகாப்புக்
...டுக்கிறேன்." என்று வஞ்சக
...ழி வீசினான் அல்மேடா. பராக்
...பாகு பணிந்து கொடுத்தான்
...ற்கு. அன்று பிறந்தது இலங்கை
...ன் உரிமை வாழ்வுக்கு வேட்டு.
... நாளும் நாளும் வளர்ந்தது.
...தியில் இலங்கை முழுவதை
...ம மாற்றானின் காலடியில்
...ண்டு சேர்த்தது. 1580-ல்
...பாலன் என்ற இலங்கை வேந்
... தனக்குக் குழந்தை இல்லை—
...வே தன் நாட்டை ஆளப்
...ந்தவர்கள் யாரும் இல்லை
...று சொல்லி, இலங்கை ஆட்
...ய போர்ச்சுகல் மன்னனுக்கு
...மை ஆக்கினான். அவனா ஆக்கி
...ன்? போர்ச்சுகல் ராஜதந்திரி
...ின் துப்பாக்கி முனை ஆக்கிற்று.
...ர்களுடன் கூட வந்த பீரங்கி
...ின் குண்டு வீச்சு ஆக்கிற்று.
...திபத்தியத்தின் பிறப்புரிமை
...று சொல்லப்படும் பித்தா
... தந்திரம் ஆக்கிற்று. மன்னன்
...பாலனுக்கும் அவனுடைய
...ாதி மற்றொருவனுக்குமிடையே
...டு மூட்டிவிட்டு, அந்தப்
...வையும் பூசலையும் குன்றாமல்
...றயாமல் பயன் படுத்திக்
...ண்டு, தங்கள் ஏகாதிபத்தியத்
... இலங்கை மண்ணில் ஆழப்
...த்து விட்டனர் போர்ச்சுகீசியர்.
...7-ல் தர்மபாலனும் மாண்டான்.
...ங்கையில் போர்ச்சுகீசியர்
...சியும் பூரணத்துவம் பெற்று
...டது.

...னினும் அதை ஒப்பவில்லை
...ங்கையில் ஒருபகுதியை ஆண்டு
... கண்டி மன்னர்கள். போர்ச்சு
...யரை விரட்ட அவர்கள், டச்சுக்
...ர்களை துணைக் கழைத்தனர்.
...கணமும் சுணக்காது ஓடோடி
...னர் டச்சுக்காரர்கள். வெறும்
...ய மேல்லும் இழவிக்குக்
...ஞ்சம் அவல் வேறு கிடைத்து
...ால் கேட்கவா வேண்டும்
...ள் கொண்டாட்டத்திற்கு?
...னமே, இலங்கையில் தன்
...திபத்தியத்தை எப்படி நிறுவு
...ன்று அடைகாத்துக்கொண்டி
... டச்சுக் கோழி, இப்போது
...கை மன்னன் ஒருவனே

அதற்கு அன்பழைப்புத் தரும் போது, தன் சிறகடித்துப் பறந்து வந்ததில் வியப்பேது? டச்சுக்காரர்கள், முதலில் மன்னன் இரண்டாவது இராஜசிம்மனுக்குத் தோள் கொடுக்கும் துணைவர் கோலத்தில் வந்தனர். ஆனால் பிறகோ ஒண்ட வந்த பிடாரி ஊர்ப் பிடாரியைத் துரத்திய கதையைத் தம் வாழ்க்கை வரலாறாக மாற்றிக் காட்டினர்.

டச்சுக்காரர்கள் முதலில் பட்டிகலாவை, பிறகு கொழும்பை, பிறகு யாழ்ப்பாணத்தை, பிறகு இலங்கை முழுவதையுமே தம் ஆதிக்கம் எனும் பம்பரத்தில் ஆட்டிவைத்தனர். 1638 முதல் 1795 வரை—160 ஆண்டுகள்—அந்தப் பம்பரம் சுழன்றது. இறுதியில் அதைத் தட்டிவிட்டான் ஆங்கிலேயன், 1795ல்! அந்த ஆண்டு, கர்னல் ஜேம்ஸ் ஸ்டுவர்ட் எனும் ஆங்கிலத் தளபதி படையெடுத்தான், போர் புரிந்தான், திரிகோணமலை யாழ்ப்பாணம் முதலிய சில பகுதிகளைக் கைப்பற்றினான். ஆனால், கண்டி, இலங்கையின் உள்நாட்டுப் பகுதி, அவனால் பிடிபடாமலே இருந்தது. கண்டி மன்னனின் அமைச்சன் ஆங்கிலேயரை அழைக்கவும் செய்தான் கண்டியைக் கைப்பற்ற. ஆனால் படைபலம் சரி இல்லை என்று கூறி மறுத்துவிட்டான் ஆங்கிலேயன்.

மறுத்துவிட்டானே தவிர மறந்துவிட்டானில்லை கண்டியை. ஓடு மீன் ஓட உறு மீன் வரும் அளவும் வாடி இருக்குமாமே கொக்கு, அது போல, தக்க வாய்ப்பை எதிர்நோக்கி இருந்தான். 1815-ல் அந்த வாய்ப்பும் வந்தது. பிரிட்டானிய சூழ்ச்சியில் கண்டியும் கால் இடறி வீழ்ந்தது. எஹலப்போல்—ஒரு குவிஸ்லிங், ஒரு குடிலன், ஒரு பூர்ணையா, ஒரு ஒமிசந்த், சொந்த நாட்டை மாற்றார்க்குக் காட்டிக்கொடுக்கும் அளவு உள்ளத்தில் உணர்ச்சி அற்ற ஒரு கயவன்—ஆங்கிலேயர்க்கு கண்டி மன்னனைக் காட்டிக் கொடுத்தான், இந்தியாவில் சுராஜ்—உத்—தௌலாவை மீர் ஜாபர் காட்டிக்கொடுத்தது போல. அவன் கண்டி மன்னனை மட்டுமா காட்டிக்கொடுத்தான், இலங்கையின் உரிமையைக் காட்டிக் கொடுத்தான், ஈழத்தின் இன்ப வாழ்வைக் காட்டிக் கொடுத்தான், விடுதலைத் தத்துவத்தையே காட்டிக் கொடுத்தான்; ஆங்கில ஆட்சிக்கு, வழி, தேடிக்கொடுத்தான். இலங்கைக் கரும்பு தின்ன ஆங்கிலர்க்குக் கூலியா வேண்டும்? தின்றனர் தாராளமாக. ஆனால் கரும்பு சக்கையாயிற்று; இலங்கை பொலிவிழந்தது.

1815-ல் விக்ரம ராஜ சிம்மன்—கடைசி கண்டி மன்னன்—ஆங்கிலரால் சிறைபிடிக்கப்பட்டு தமிழ் நாட்டு வேலூருக்கு அனுப்பப் பட்டான். அவனுடைய அரசுகட்டில் இங்கிலாந்துக்கு அனுப்பப் பட்டது. மன்னன் வேலூரில் மாண்டான்—மன நோயும் உடல் நோயும் வருத்திய காரணத்தால். அரசுகட்டில் சீமையில் இருந்தது—பிரிட்டானியத்தின் "பிடி" எவ்வளவு பலம் பொருந்தியது என்பதை விளக்கிக் கொண்டு!

சர் ராபர்ட் பிரௌன்ரிக், ஈழ நாட்டு வெள்ளை கவர்னர், அன்று அந்த சிங்காதனத்தைக் கொண்டு போனான் சீமைக்கு. இன்று கிளஸ்டர் கோமகன், ஆறாம் ஜார்ஜ் மன்னரின் சார்பில் அதைத் திருப்பிக் கொடுத்தார் இலங்கைப் பிரதமரிடம். சரித்திரம் திரும்புகிறது! முன், பின்னாகிறது! பின், முன்னாகிறது! அரசு கட்டிலை பீரங்கி முனையில் கொண்டு சென்றவன், இன்று, சிறு முறுவல் முகத்தரும்ப, களிப்புடனே திருப்பித் தருகிறான்! இங்கிலாந்து, தன் ஏகாதிபத்தியக்கதைத் தானே இழக்க முன் வருகிறது! நச்சுப் பாம்பு தம் விஷப் பற்களைத் தானே கழற்றி எறிகிறது—தயக்கம் துளியுமின்றி! உண்மையிலேயே, இஃதோர் அரிய காட்சி மட்டுமல்ல, நம் சிந்தனைக்குத் தீனி கூட!

முதலில் போர்ச்சுகீசியர், பிறகு டச்சுக்காரர், இறுதியில் ஆங்கிலேயர், என்ற இம் முறையில் "எஜமானர்கள்" மாறி மாறி வந்தனர் இலங்கைக்கு. ஒவ்வொருவரும் ஒவ்வொரு நூற்றாண்டுக்கும் மேலாகவே இலங்கையை ஆட்டிப்படைத்தனர்; இலங்கையரைத் தம் ஆளடிமைகள் என்றெண்ணினர்; இன்றோ, இறுதியில் கோல் ஓச்சி வந்த ஆங்கில ஏகாதிபத்தியம், போய் வருகிறேன் என்று பொன்னான மொழி கூறி விடை பெற்றுக் கொண்டது.

* * *

இயற்கைச் செல்வியின் நடன பூமி இலங்கை. வெள்ளித் தம்ர

தது போல, அந்த மாணிக்கத் தீவு, அலை கடலுக்கிடையே அமர்ந்து ஒய்யாரமாக ஊஞ்சலாடுகிறது.' ஊஞ்சல் மட்டுமா ஆடுகிறது, இன்பத் திராவிடத்தைத் தொட்டுக் கூப்பிட்டுக் கொண்டும் இருக்கிறது வா வா என. தனுஷ் கோடிக்கும் தலைமன்னாருக்கும் இடையே அதிகத் தொலைவு இல்லை. தலைமன்னாரில் இறங்கி, இலங்கைக்குள் புகுந்து விட்டாலேஇன்ப புரிப் பயணம்தான். பாடி நகர்ந்து வரும் நதிகள், வானைத் தேடிச் சென்று "கதை பேசும்" மலைகள், செழித்து அடர்ந்து திரண்ட மரக் காடுகள், மந்தமாருதத் தென்றல் காற்றிலே தவழ்ந்து தவழ்ந்து விளையாடும் பூம்பொழில்கள், ஓங்கி வளர்ந்த தென்னை—அதன் கன்றுகள், இடை இடையே பனையும் பாக்கு மரமும் என்ற இந்த இயற்கை எழில் நிலையங்கள் தான், நம்மை, என்ன சேதி என்று முகமன் கூறி, எம் எழில் பாரீர் என்று பெருமை பேசி வரவேற்கும் இ... கையின் எம் மருங்கும். அன்பு... பரப்பும் புத்தர் சிலைகள் பார்... இடமெங்கும் நிறைந்திருக்... யானைகள் கூட்டங் கூட்ட... மலைக்காடுகளில் நகர்ந்து செ... லும். அந்த நாட்டிலே உள்ள ... வியா பூந்தோட்டம் உலகி... ஒரு புதுமை. செடிக... கொடிகளும் பிறவும் ஒன்று... ஒன்று பின்னியும் தழுவி... செறிந்தும் மிடைந்தும் அங்கு... பம் பல செய்யும் அழகும் அ... மும் நம் நெஞ்சை அள்ளிக்கொ... டோடி விடும். இலங்கை ஒரு...

(10-ம் பக்கம் பார்க்க)

"பொன்னி" பொங்கல் மலர்

[விலை ரூ. 2-8-0 தபாலில் ரூ. 3-0-0 இடம்: பொன்னி அலுவலகம், இராஜா வீதி, புதுக்கோட்டை.

அழகிய மலர்கள் எம் தனி உடைமை என்று கொக்கரித்திருந்த சிறுமதியாளர் சிந்தை கலங்க வெளிவந்திருக்கிறது இந்த மலர். இதில் வாசம் உண்டு. வாசம் வந்த வசத்தில் திரும்பினால் மலர் பிலிற்றும் தேனின் தெவிட்டாத தீஞ்சுவையும் உண்டு. முதலிலேயே கலை மணம் நம் உள்ளத்தைத் தொட்டிழுக்கிறது. கிட்டே நெருங்கியதும், கருத்துத் தேன் சிந்தனையில் இன்பம் பாய்ச்சுகிறது. மலர் முழுவதும் எழுத்தோவியங்களும் கலைஓவியங்களும் நிறைந்துள்ளன. மூன்று நிற அட்டைப் படம், நூல் முழுவதும் 'ஆர்ட்'தாளில், வண்ணப் படங்கள் உள்ளே பல, பெரியார், அண்ணாதுரை, பாரதிதாசன் இவர்களின் கைத்திறன்—இவை 'பொன்னி' மலரின் சிறப்பியல்புகள். வரதராசனர், அப்பாதுரை, அன்பழகன், நெடுஞ்செழியன், காரண துரைக்கண்ணன், தில்லை வில்லாளன், இராதாமணாளன் ஆகியோர் கருத்துரைகள் உண்டு. பெரியாரின் முழு உருவப் படம் மலரின் அழகுக்கு அழகு செய்கின்றது. விலை ரூபா இரண்டரை என்று தெரிகிறது. தமிழர்கள் மட்டும் பணக்காரர்களாய் இருந்தால் ரூபா இரண்டரை அல்ல இருபதரையும் கொடுக்கலாம். ஆனால் இப்போதைக்கு இரண்டரை ரூபாவுக்குமேல் தமிழர்களால் தர முடியாது என்பது உண்மைதான். பொன்னி மலர் தமிழர் [illegible] ப் இருக்கவேண்டும்.

மதுரை மாவட்ட முதலாவது

திராவிடர் கழக மாநாடு

நிலக்கோட்டை.

22—2—48 ஞாயிறன்று

நிலக்கோட்டை அர்ச்சுனன் பந்தலில் நடைபெறும்.

தலைவர்: C. D. T. அரசு

திறப்பாளர்: T. P. வேதாசலம்

வ. உ. சி. படத்திறப்பு: திரு. வி. க.

திராவிடநாடு படத்திறப்பு: ஏ. பி. ஜனார்த்தனம்

தாளமுத்து, நடராசன் படத்திறப்பு } கே. வி. அழகர்சாமி

தலைவர் பெரியார்,

தோழர்கள் குஞ்சிதம், குருசாமி, சி. பி. சின்னராசு, கே. வி. கே. சாமி, மதியழகன், ஆசைத்தம்பி, டி. கே. சீனிவாசன், என். வி. நடராசன், ஜீவரத்தினம், திராவிடமணி ஆகியோர் கலந்துகொள்வர்.

இரவு 10 மணிக்கு, பெரியார் தலைமையில் M. R. ராதாவின் தூக்குமேடை நாடகம்.

காலையில் மூ. ஆழ்வார் தலைமையில் கருஞ் சட்டை ஊர்வலம்.

அனைவரும் வருக!

இ. காத்தான்,
வரவேற்புத் தலைவர்.

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

...கை சோதனையிட்டு இக்கய
குழுவில் பலரைக் கைது
...து, பல பயங்கரத் தகவல்
...யும், ரிகார்டுகளையும் நடை
...ற விதிகளையும், சதிச்
...ல் முறைகளையும் கண்டு
...த் திருக்கின்றனராம். பத்
...கைகளில் அடுக்கடுக்காகச்
...கள் வருகின்றன இது
...ல—நெஞ்சைக் குலுக்கும்
...கள்! அமைதியை விரும்
அனைவர் உள்ளத்தையும்
...னைக் களமாக்கும் சேதிகள்!

...ந்திபத் துணைக் கண்டம்
...த் கதறி அழ, உலகம்
...கமும் ...ர்வுமுற, மனித
...தாயமே கலங்கிக் கதி
...கி அழு... தீர்க்க, ஆண்
...ண் குழந்தை, ...ர் யாவருமே,
...ன்பத்தைக் கொஞ்சம்
...வ பார்க்கப் போகின்றோம்—
...பத்தை எம்மிடத்தில் நீட்
...ர் போய்விடுங்கள்'' என்று
...ல்லாமற் சொல்லி வருந்தி
..., காந்தியார், நம்மை விட்
...பிரிந்த நாள் 30-1-48.
...று முதல் இன்று வரை,
...இதழ்களை எடுத்துப் புரட்
...ல் கண்களில் தென்படும்
ஒரு சேதி சதிக் கும்பலின்
...கை விளக்கம் தவிர
...ல்லை என்றால், எவர்தான்,
...யாவில் இத்தகைய குழு
ஒன்று இருக்கிறதே—
...திக்கு வழி காட்டிய இந்தி
...ல் இருக்கிறதே — கத்தி
...ரத்தமின்றி யுத்த
...ன்று செய்து வெற்றிபுரிக்கு
...சேர்ந்த இந்தியாவில்
...க்கிறதே என்று வேதனைப்
...திருக்க முடியும்?

...பாக்கியை ஏந்தி நிரபராதி
... சுட்டுக் கொன்றதோடு
...தா இந்தக் கும்பல்?
...டி இருந்தால் கூடப் பரவா
...யே, துப்பாக்கியைப் பிடுங்கி அதை ஏந்திய காத்தில் தளை பூட்டி, சிறைச் சாலையில் அத்தகைய ''குற்றவாளர்களை'' அடைத்துவிட்டால் ...த்து தீர்ந்துவிடுமே! ஆனல் இந்தக் கும்பல் ஒரு கரத்தில் துப்பாக்கி என்றால் மறு கரத்தில் ஜெபமாலையை அல்லவோ ஏந்தி இருக்கிறது! ஜெபமாலை ஏந்தியோரை அடக்குவது எளிதல்லவே!

ஜெபமாலை, மக்களை மயக்கும் பொருள்களில் ஒன்று. அந்த மயக்கத்தில் மக்கள் ஆழ்ந்துவிட்டால், ஜெபமாலைக்குள் மறைந்திருக்கும் துப்பாக்கி அவர்கள் கண்களுக்குத் தெரிய முடியாது. ஏனெனில் அப்போது அவர்கள் கண்களில மதத்திரை வீழ்ந்துவிடும்! மதத்திரையையும் ஊடுருவிக்கொண்டு உண்மையைக் கூர்ந்தறியும் பண்பும் பக்குவமும் எல்லாருக்கும் எளிதில வருவதில்லை—வரமுடியாது. அதிலும் பரம்பரை பரம்பரையாக மூட நம்பிக்கை என்னும் நச்சுச் சூழலில் உலவும் இந்திய உப கண்டத்துப் பாமர மக்களுக்கு அத்தகைய அறிவுத் தெளிவு வருவது மிக மிகக் கடினம்.

ஆம்! ஆகவேதான் ஆபத்து அதிகம்! ஜெபமாலை—துப்பாக்கி இரண்டையும் ஏந்தியுள்ள இந்த வடநாட்டு வம்பர்களின் சழக்குச் செயலை மாய்ப்பதுவும் கடினம்!

''இந்து மதம் ஓங்குக! நமது கலை, நாகரிகம், பண்பு, பழக்க வழக்கம், வேதம், சாஸ்திரம், புராணம், இதிகாசம், உபநிடதம்—இவை வெல்க! நமது புராதன தர்மம் செழிக்க! நமது பழம்பெருமை வாய்ந்த ஆச்சார அனுஷ்டானங்கள் சிறக்க!'' என்று கூவினல், அது மக்களுக்கு இனிய கீதமாய்த்தான் இருக்கும். ஏனெனில் பலப் பல நூற்றாண்டுகளாக அவர்கள் கேட்டுப் பழகிய கீதம் அது ஆகவே அது இனிப்பது இயல்பு. மனித இயற்கை அத்தகைய இதை நன்குணர்ந்திருக்கி...னர், வடநாட்டில் காந்தியாரைக் கொன்று வேறு பலரையும் வீழ்த்த எண்ணிய விபரீத வைதீகர்கள்! உணர்ந்ததால்தான் துப்பாக்கியை மட்டுமல்ல, ஜெபமாலையையும் ஏந்தி இருந்தனர். குத்தும் கொலையும் நிகழ்த்தியதோடு நில்லாமல் இந்து மதக் கோட்பாடுகளைப் பற்றிய பிரசாரமும் கூடவே செய்து வந்தனர். இரத்த சோதனை என்ற அளவில் நில்லாமல் ஆத்ம சோதனை என்ற ஏமாற்றுத் திருவிழாவும் நிகழ்த்தி வந்தனர்.

நிகழ்த்தி வந்தனர்—எனவேதான் பலரும் ஏமாந்து அவர்கள் விரித்த வலையில் விழுந்தனர், இன்று தம்மை உணர்ந்தனர், திகைக்கின்றனர், பிடி சாபம் என்று கூவுகின்றனர், விடாதே, அடை கூண்டில் என்று கொக்கரிக்கின்றனர், தம் உள்ளத்தில் குமுறும் ஆத்திரத்தை அமளி பல செய்து வெளிப்படுத்துகின்றனர். வெளிப்படுத்தி என்ன பலன்? காலம் கடந்துவிட்டது. காந்தியார் மறைந்துவிட்டார்.

ஆனல் மக்களுக்கு இன்று மத வெறியர்கள்மீது ஏற்பட்டுள்ள வெறுப்புணர்ச்சி இப்படியே நிலைக்குமா? இந்த உணர்ச்சி மத வெறியை இந்தியக் கண்டத்தை விட்டே அகற்றி...த்திவிடுமா? அல்லது வேதாளம் மறுபடியும் முருக்க மரம் ஏறிய விக்கிரமாதித்தன் கதைபோல மறுபடியும் மத வெறி, சூறைக் காற்றாக மாறி இந்தியத் தலத்தில் மோதுமா?

இது, இந்திய அரசியலாரும் மாகாண அரசியலாரும் தக்க நடவடிக்கை எடுப்பதைப் பொறுத்திருக்கிறது.

தக்க நடவடிக்கை என்பது ராஷ்ட்ரீய சேவா சங்கத்தைச் சட்ட விரோதமானது என்று அறிக்கையிடுவதோடு முடிந்துவிடாது; அதிற் சேர்ந்த சிலரையோ பலரையோ சிறைக்கு அனுப்புவதோடு முடிந்துவிடாது; வேறு ஏதேதோ கழகங்கள்மீதும் தொண்டர் படைகள்மீதும் "சந்தடியோடு சந்தடியாக", தடைவிதிப்பு என்னும் சட்டத்தை எறிவதோடும் முடிந்துவிடாது; வகுப்புவாதக் கழகங்களை இனி விட்டு வையோம் என்று அண்டம் அதிர முழக்கம் பல எழுப்புவதாலும் முடிந்துவிடாது; ஒன்றன் பின் ஒன்றாக "வகுப்பு வாதிகளே! உஷார் உஷார்" என்று அழகிய சொற்களை அடுக்கிக்காட்டி அறிக்கைத் தொடர்களை வீசுவதோடும் முடிந்துவிடாது. தக்க நடவடிக்கை என்பது இவ்வளவையும் தாண்டிச் செல்வது. இவற்றிற்கெல்லாம் அப்பால் இருப்பது.

உண்மையாகவே தக்க நடவடிக்கை என்பது மக்கள் வாழ்க்கையிலிருந்து மத வெறியைக் கல்லியெறிவதாய் இருக்க வேண்டும். மதம் ஒவ்வொரு தனி மனிதனுடைய சொந்த விவகாரமாக, பொது வாழ்க்கையுடன் தொடர்பு அற்றதாக, ஆக்கப்பட வேண்டும். ஒருவனுக்கு "பாகவதர் பிளேட்" பிடிக்கும். மற்றொருவனுக்கு "தேசிகர் இசை" பிடிக்கும். இன்னும் ஒருவனுக்கு "எம். எஸ்." கீதம் பிடிக்கும். வேறு ஒருவனுக்கு "சுந்தராம்பாள் கச்சேரி" சுவைக்கும் என்றால் அது அவரவர்களுடைய தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களைப் பற்றிய விவகாரம்; பொது வாழ்க்கை என்னும் நீரோட்டத்துடன் தொடர்பு இல்லாத விவகாரம். மதமும், அதே போல பொது வாழ்க்கையிலிருந்து கத்தரிக்கப்பட்டுவிடவேண்டும். சமுதாயக் கூட்டு வாழ்க்கையில் மதத்திற்கு இடம் இல்லாதபடி ஆக்கப்பட வேண்டும். பள்ளிக்கூடம், சட்டசபை, அரசியலார் அலுவலகம், வழக்குமன்றம், பொதுக் கூட்டம் இங்கெல்லாம் மதம் எத்தகைய ஒதுக்கிடமுங்கூடப் பெறக்கூடாது. **எவர் வேண்டுமானாலும், எந்த மதத்தை வேண்டுமானாலும், எவ்வளவு வேண்டுமானாலும் பின்பற்றலாம்; வழிபாடு செய்யலாம்; வாழ்த்தலாம்; போற்றலாம்; ஆனால் பொது வாழ்க்கையில் தந்தம் மதத்தை நுழைத்து குழப்பத்திற்கு இடம் அளித்தல் ஆகாது** என்று அரசியலார் அறிக்கை இடவேண்டும். மீறி நுழைப்பவர் கடுந் தண்டனைக்கு ஆளாக்கப்படவேண்டும். இத்துறையில் அதோ பொதுவுடமை ரஷ்யா நல்ல வழி காட்டி இருக்கிறது. அதைப் பின்பற்றுவதுதான் இன்றைய தேவை. பின்பற்றினால்தான் மதவெறி மீண்டும் இந்தியத் துணைக் கண்டத்தில் கலைகாட்டாது. **இல்லையேல்** வைதீகபுரி விபரீதவாதிகளின் "ஜபமாலை — துப்பாக்கி" இரட்டை நாடகம் அவ்வப்போது நடந்துகொண்டுதான் இருக்கும். "இராமாயணம்" (மதவாதம்) படித்துக் கொண்டே "பெருமாள் கோயிலை" (மக்கள் வாழ்க்கையை) இடித்துத் தள்ளும் கோரக் காட்சி நிகழ்ந்துகொண்டுதான் இருக்கும். கொடுநினைப்புடைய நாதுராம் விநாயக் கோட்சேக்கள் காட்டிலே, மக்க
ளுக்கிடையிலே உலவிக்கொ
தான் இருப்பர். கோட்
ளின் உள்ளத்தின் உ
இருக்கும் நச்சுப் பாம்
சர்க்காரின் அடக்குமு
அனல் வீசக் கண்டு, ப
இருக்கலாம் சில நா
ஒளிந்து ஒதுங்கலாம்
நாளைக்கு. அடங்கி மறை
சில நாளைக்கு. ஆனால் ச
வாய்த்தபோது அதுதிட
வெளிப் போந்து, சமு
தைத் தீண்டவே செ
தீண்டினால் விஷம் இற
பிறகு, விளைவைச் சொல்
வேண்டும்?

சமுதாயம் அத்தகைய
கடியினால் சாக்காடு அ
கூடாது என்பது நம்
சர்க்காரின் ஆசையும்
தானே! ஆம் எனில் நாம்
தக்க நடவடிக்கை எடுக்க
கார் துணியுமா?

காலம் பதில் சொல்லு

(8-ம் பக்கத் தொடர்ச்சி

சர்லாந்து இயற்கை எழிலில்
குட்டி இங்கிலாந்து, கடல்
நிலம் வாய்ந்த தனி அழகில்
இத்தகைய எழில்மிகு
டைத்தான் ஏய்த்து வ
வெள்ளை "ஜான்புல்கள்"
வரை. இன்று, இலங்கை,
புரியில் உலவத் தொடங்கி
றது. நம் வாழ்த்து இ
எனும் பெயர் படைத்த அ
நாட்டுக்கு—குறிப்பாக அ
தமிழர்க்கு.

பர்மாவைப் போல அ
முழு விடுதலை பெறவில்லை.
யாவைப் போல "கொஞ்சம்
வான" விடுதலையைத்தான்
றுள்ளனர். விரைவில் மு
தலையும் பெறவேண்டும் அ
என்பது நம் ஆசை. "அ
என்ன, நாம் கூடத்தான்
விடுதலை பெற்றாகவேண்டு
வில்.

வாழ்க இலங்கை! வாழ்க

(முதல் பக்கத் தொடர்ச்சி)

எந்தத் தனிப்பட்ட கட்சியாகிய நீரில் த்தாலும் அந்நீர் அத்தனையும் நன்னீராகி டிற்கு நலம் பயக்கும் தன்மையதாகும். லாப் பொருளும் இதன்கண் உள; இதன் இல்லாப் பொருள் ஏதுமே இல்லை" என்ற ந்தறளுக்களித்த சிறப்புரை நம் இயக்கத் க சாலப் பொருந்தும்.

ஏனைய கட்சிகள் இன்று தோன்றி நாளை யும் இயல்புடையன. 'நெருநல் உளது று இன்றில்லை என்னும் பெருமை உடைத் ' இவ்வரசியல் உலகு. ஆனால் என்றைய ம் டார்வின் கொள்கைப்படி குரங்கு வர்க்கத் வால் அகன்று, வாலறிவு அகலமாய் நீண்ட அத்தினத்திலிருந்தே (மனிதனுக்குச் சிந்தனை தோன்றிய தினத்திலிருந்தே—மனிதன் கு நிலையினின்று மனித நிலைக்கு மாறிய த்திலிருந்தே) நம் சுயமரியாதை இயக்கம் றி வளரலாயிற்று. வேறுவிதமாகக் கூற டின், என்றைய தினம் கடவுள் ஈடன் தோட்டத்தில் ஆதாம் ஏவாள் என்ற இரு யும் விட்டுவைத்து "அழகிய கனி"யைப் தீர் என்று கட்டளையிட்டாரோ, எந்தத் தில் ஏட்டிக்குப் போட்டியாய்த் தம்மிட பகுத்தறிவின் பண்பைப் பரீட்சிக்க, ண்டாமென்ற கனி"யை (Forbidden) அவர்கள் விரும்பித் தின்று ருசி கண்டார் அந்தத் தினமே ஆரம்பமாயிற்று நம் சுய தை இயக்கம். அதேபோல் எந்த நாளில் இறுதி மனிதன் ஒருவன் இவ்வுலகைவிட்டுப் பிரி வானோ அந்தத் தினம் வரைக்கும் நிலைத்திருக்கும் இவ்வியக்கம்.

"சமூகத்தின் உடற்புண்ணுக்குக் காங்கிரஸ் ஒரு சொட்டு மருந்து. ஆனால் சுயமரியாதை இயக்கம் வயிற்றைக் கலக்கிக் கழுவி கோயறுக் கும் தீவிர பேதி மருந்தாகும். எனவே நம் இயக் கமே சிறந்தது. இதுவே இந் நாட்டிற்குத் தேவை."

—இந்தத் தேவையை இவ்வளவு அழகாக வும், அருமையாகவும், எதுகையும் மோனையும் துள்ளித்துள்ளி விளையாடும் தனி நடையில் எடுத் துக் கூறியவர் யார் தெரியுமா? ஒரு திருவாசக பக்தர்; வழக்கறிஞர் நாவலர்; "கடல் மடை திறந் தால் என்ன"ப் பேசும் ஆற்றல் படைத்தவர் பாவாணருங்கூட. திருப்போரூர் முருகன் சந் நிதி முறை என்னும் கவிதை புனைந்துள்ளவர். அடடாவோ அடடா! என்ன வியப்பு! அப்படிப் பட்டவரா இப்படிச் சொல்லி இருக்கிறார் என்று நாக்கைத் தட்டுகிறீர்களா, தட்டுங்கள் தாராளமாக. ஆனால், இடையே ஒருசேதி. அவர் இந்த வாசகங் களைக்கூறியது இன்றல்ல, மதம் அவரை அண்டா திருந்தபோது! 1937-ல்! அவர் தன்மானத் தெளிவுடன் இருந்த காலத்தில்!

அவருடைய பெயர் தெரிய வேண்டுமா!

கே. எம். பாலசுப்ரமணியம்

பி.ஏ., பி.எல்.

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

த்தை எடுத்துக்காட்டி, ஒன்று—இரண்டு று—நான்கு என்று நிமிடங்களை எண்ணி ஐந்து. முடிந்ததும் கேடு ஒன்றுமில்லை அவ கீழே இறங்கினர். மக்களை இன்னும் சாட்சி தேவை என்று கேட்டார். ந்த போய்விட்டனர் மக்கள்! எப்படி, லாவின் சாமர்த்தியம்! அவர் சொல்லும் தப்பாய் இருக்கலாம்: ஆனால் அவரு சமயோசித அறிவை நாம் பாராட்டாது முடியுமா?

காரணம், சுருக்கமாக!

ர் சி.என்.ஏ, சில ஆண்டுகளுக்கு முன்பு குடியில் ஒரு மாநாட்டில் பேசிக்கொண் ர். கேள்வித் தாள் ஒன்று வந்தது. விசுவநாதம், சர் ஆர். கே. சண்முகம், குமார ராஜா முத்தையா இவர்கள் மூவரும் ஏன் உங்கள் கட்சியைவிட்டு விலகிவிட்டனர்?—இது கேள்வி. மாநாட்டினர் முழுவதும் இந்தக் கேள் விக்கு அண்ணா என்ன பதில் சொல்லப் போகிறார் என்று உள்ளத்தில் ஆவல் தெறிக்க, அண்ணா வையே இமை கொட்டாது பார்த்துக்கொண் டிருந்தனர். அண்ணா கூறினார்:

"விசுவநாதம் ஸ்ரீமான் ஆனதால் விலகிவிட்டார். ஆர். கே. சண்முகம், சர்—ஆகவே அவர் கட்சியில் இருக்க முடியாது. முத்தையா, குமார ராஜா. ராஜாக்கள் அங் ஙரக எங்களிடம் எப்படி இருப்பார்?"

கொட்டகை அதிர எழுந்தது கை ஒலி. கேள்வி கேட்டவர் என்ன எண்ணினாரோ பாவம்! நாம் எழுதிய சொற்களிலேயே விடையும் இருக் கிறதே, என்ன வியப்பு என்று எண்ணி இருப் பாரோ என்னவோ!

ஒரு கையில் ஜெபமாலே! மறுகையில் துப்பாக்

படிப்பது இராமாயணம்—இடிப்பது பெருமாள் கோயில்

வைதிக புரியின் விபரீத மனிதர்கள்.

"ரகுபதி ராகவ ராஜாராம்
பதீத பாவன சீதாராம்"

—இது பஜனே.

"எடு துப்பாக்கியை. சுடு குறி பார்த்து! தவருதே லாகவத்தில்!"

—இது சூழ்ச்சி.

*   *   *

"பகவத் கீதையே லோக க்ஷேம சூஸ்திரம். உபநிஷத் வாக்கியங்களே மோக்ஷ சாம்ராஜ்ய வழிகாட்டி. சாம வேத யஜுர் ருக் வேத வேதாந்தமே பரப்பிரம்ம விஸ்வ ரூப தருப்பணம்"

—இவை, ஆத்மார்த்த வசனங்கள்.

பழுதின்றிக் குறி பார்த்து,
லக்ஷியத்தைப்
பற்றவிடு! மற்றென்று! மேலும்
ஒன்று!
படபடெனச் சரமாரி பொழி!
சுதர்மா,
நிற்கையில் நீ நிமிர்ந்துநிற்பாய்
குன்றத்தைப்போல்
நெளியாதே! லாகவத்தில் தேர்ச்சி
கொள் நீ!

—இவை சதிச் செயல் சொற்றொடர்கள்.

*   *   *

ஜெப மாலையை உருட்டு. பாகவதத்தைப் பயிலு. சஹஸ்ர நாமாவளி கூறு. பகவத் தியானம் செய்திடு.

—வெளியார், கேட்க!

குத்து! வெட்டு! கொல்லு! சுடு! துப்பாக்கியைப் பிடி! வாள் ஏந்து! பிச்சுவா எடு! எதற்குந் துணிந்திடு! எவரையும் சாய்த்திடு!

—இரகசியத்தில், பேச்சு.

*   *   *

ஒரு கையில் ஜெபமாலே!

மறு கையில் துப்பாக்கி!

படிப்பது இராமாயணம்!

இடிப்பது பெருமாள் கோயில்!

உதட்டில் உபநிஷதம்.

உள்ளத்தில் "விஷ விருட்சம்"

பேச்சு, இந்து மத கலாச்சாரப் பெருமைபற்றி!

செயல், குண்டு எறிதல்! தலையைக் கொய்தல்! இன்ன பிற!

இத்தகைய இரட்டைவாழ்வு படைத்தவர்கள் — பயங்கர நினைப்பும் நடவடிக்கையும் உடையவர்கள்—சதிகார சூழ்ச்சிக் கூட்டத்தவர் தலைமறைவாய், மண்ணுக்கடியில் மடமடவென வளர்ந்துவிட்டனர் வடநாட்டில். உலக உத்தமர் காந்தியாரின் உயிரைக் குடிக்கும் அளவுக்கு உன்மத்த உள்ளம் படைத்த உலுத்தர்கள் பெருகிவிட்டனர் அங்கு. காந்தியாரை மட்டுமல்ல, நேரு முதலான பிரபல தலைவர்களை எல்லாம் கொல்வதற்கும் சதி புரிந்தனராம் அப் பாதகர்கள். இரண்டு கிழமைக்கு முன்னால், நேரு ஒரு மாபெருங் கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்த வேளை, நாட்டு வெடி குண்டுகளையும் பிச்சுவாக்களையும் மறைத்து வைத்துக்கொண்டு அக் கும்பலைச் சேர்ந்த இருவர், அந்தக் கூட்டத்தில் உலவிடக் கண்டு, போலீசார், அவர்களைச் சிறை பிடித்துச் சென்றனராம். காந்தியார் கொல்லப்பட்டதற்குச்

சில கிழமை முன்பு,
உண்ணு விரதம் இருந்த
தில், "காந்தியார் சாகட்டு
என்று நெஞ்சில் துளியு
மின்றி நெடுந்தூரலில் கூ
ஒரு கூட்டம், உங்க
"என்ன துணிச்சல் இ
சொல்ல!" என்று
அவர்களைக் கோபித்துக்
டாரே, அந்தக் கூட்ட
கூட காந்தியாரைக்
சதிகாரக் கும்பலு
தொடர்பு கொண்டவ
ளும். சென்ற திங்கள்
யார் மீது வெடி குண்டு
குறிதவறியவனும், பின்
ரைச் சுட்டு வீழ்த்திய சு
சனும் இதே கும்பலைச்
கயவர்கள்தானும். ஜ
25-ம் நாள்—காந்தி
கொலைக்கு 5 நாட்களுக்கு
னல் இந்தக், கயவர்கள்
மொன்று நாகபுரியில் கூடி
அந்தச் சதிக்கூட்டத்தில்
யாரைக் கொல்வது யார்
பிரச்சினை எழுந்ததாம்.
போது, அந்தப் பிரச்சி
தீர்ப்பதற்காகத் திருவுளச்
குலுக்கப்பட்டதாம்.
விளைந்த முடிவுதானும்
கோட்சே கொலை பா
குத் தெரிந் தெடுக்கப்ப
பம்பாய், மத்திய மா
ஐக்கிய மாகாணம், பா
டில்லி, மஹாராஷ்டிரம்
லான பல பகுதிகளிலும்
சதிக் கும்பல் சிதறிக்கி
றனராம். போலீசா

(9-ம் பக்கம் பார்

Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoli
at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B.A.